**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.73/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லதாமகேஷ்வரி | மதம் | : இந்து |
| க/பெ | : அஸ்வத்தாமன் | ஜாதி | : -- |
| வயது | : 49 | கிராமம் | : முகப்பேறு |
| தொழில் | : காவல் ஆய்வாளர் | வட்டம் | : அம்பத்தூர் |

**06.11.2024**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 09.03.1998 ம்தேதியிட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன்.**(வரி ரசீது வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 28.06.2004 ம் தேதியிட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன்.**(வரி ரசீது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 03.04.2005 ம் தேதியிட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன்.**(வரி ரசீது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிப்ரவரி 2010 ம் ஆண்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன்.**(வரி ரசீது வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 18.02.2020 ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன்.**(வரி ரசீது வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மின் கட்டண அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண அட்டை வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)